

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 1.50 லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணியை மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி இல்லம் தேடி சென்று நலத்திட்ட உதவிகள் வழங்கி துவக்கி வைத்தார். இதில் கழக நிர்வாகிகள் பாலசுப்பிரமணியன், சோமசுந்தர பாண்டியன், சசிக்குமார், மருது பாண்டியன், கௌரிசங்கர், கிழக்கு மண்டலத் தலைவர் வாசுகி சசிகுமார், ஆனையூர் பெரியசாமி, மீராஜான் மற்றும் வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், கழகத்தினர் பொதுமக்கள் என திரளானோர் பங்கேற்றனர்.

### பொற்கிழி - விளையாட்டு உபகரணங்கள் - திருநங்கைகளுக்கு நல உதவிகள் - கல்வி உதவித்தொகை - மூன்று சக்கர வாகனம்- சுழல்நிதி!

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

## மாவட்டச் செயலாளர்-அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

சென்னை, நவ.29-

திமுக இளைஞரணி செயலாளர் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் தந்தை பெரியாருக்கு மலர்அஞ்சலி செலுத்தினார்.

அவருக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் மேளதாளம், கரகாட்டம், செண்டை மேளம் முழங்க பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம் -1, உதயத்தால் எல்லாம் விடியும்! கழகத்தால் எதுவும் முடியும்! எனும் தலைப்பில் நலத்திட்டம் வழங்கும் விழா நேற்று முன்தினம் (27.11.2024, புதன்கிழமை) காலை 8.00 மணியளவில், சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை யில், க.வினோத் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று கழக மூத்த முன்னோடிகள் 100 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் வழங்கினார்.

மேலும் 250 பள்ளி மாணவ- மாணவியருக்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் கல்வி உதவித்தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.13 ஆயிரம் மதிப்புள்ள விளையாட்டு உபகரணங்கள், 50 சுய உதவி குழுக்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் பணம் மற்றும் புத்தாடைகள், 100 திருநங்கைகளுக்கு தலா ரூ.10 ஆயிரம், மாற்றுத்திறனாளிகள் 10 பேருக்கு மூன்று சக்கர வாகனங்கள் என 1335 பேருக்கு நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மேலும், இந்நிகழ்வில் சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், வி.சுதாகர், சொ.வேலு, கே.எஸ்.இரவிச்சந்திரன், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், தமிழன்பிரசன்னா, கே.சந்துரு, பி.கே.மூர்த்தி, வே.உமா காந்த், சி.மகேஷ்குமார், பரிதிஇளம்சுருதி, ஐ.சி.எப்.முரளிதரன், எ.நாகராஜன், டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ். செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, கூ.பி.ஜெயின், வே.வாசு, சரிதா மகேஷ்குமார், ராஜேஸ்வரி ஸ்ரீதர், சுதா தீனதயாளன் மற்றும் எழும்பூர் தெற்கு, வடக்கு பகுதி வட்ட செயலாளர்கள், மொய்தின், டால்பின்ஹரி, எல்.சுந்தர்ராஜன், வான்மதி கதிரவன், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர்கள்: தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

வட்ட கழக செயலாளர்கள், விஜயகுமார், ஆர்.பாபு ஆகியோர் நன்றி கூறினர்.

### ஒருங்கிணைந்த தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்டக் கழகங்களின் முன்னாள் செயலாளர் - கழக முன்னோடி

# எம்.சென்ன கேசவன் துணைவியார் திருமதி செ.அமராவதி அம்மாள் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, நவ. 29-

ஒருங்கிணைந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டக் கழகத்தின் செயலாளராகப் பொறுப்பு வகித்தவரும், கழக மூத்த முன்னோடியுமான எம்.சென்ன கேசவன் அவர்களின் துணைவியார் - திருமதி செ.அமராவதி அம்மாள் அவர்கள் மறைவுற்றார்.

இம்மறைவுச் செய்தியறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்ன கேசவன் - அமராவதி அம்மாள் ஆகியோரின் புதல்வர்களான - இனாம் காட்டுப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் செ.மனோகரன், சாமல்பட்டி வேளாண்மை கூட்டுறவு வங்கியின் செயலாளர் செ.சிவக்குமார், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் செ.கார்த்திகேயன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதுடன், அன்னாரின் மறைவுக்கு தமது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

### வேலூர் மாவட்டம்

# மாவட்ட துணைச் செயலாளர் - பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல்! வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், வேலூர் மாவட்ட துணைச் செயலாளராக (ஆதிதிராவிடர்) தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.பாண்டியன் அவர்கள் வசித்து வரும் அகரம் ஊராட்சி, அணைக்கட்டு தெற்கு ஒன்றியம் பிரிக்கப்பட்டபோது திருப்பத்தூர் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டதாலும், அதைப்போலவே பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஷர்மிளா ஜெயப்பிரகாஷ் அவர்கள் வசித்து வரும் சின்னசேரி ஊராட்சி குடியாத்தம் வடகிழக்கு ஒன்றியம் பிரிக்கப்பட்டபோது திருப்பத்தூர் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டதாலும், இவர்கள் வகித்து வந்த தத்தமது பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அப்பொறுப்புகள் நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

வேலூர் மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (ஆதிதிராவிடர்), பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, நவம்பர் 30 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் வேலூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்/ஒன்றிய/நகர/பகுதிச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 27.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழாவில்

# செல்போன் டவர்களின் திறனை அதிகரிக்க வேண்டும்!

## ஒன்றிய அமைச்சருக்கு அண்ணாதுரை எம்.பி. கோரிக்கை!



திருவண்ணாமலை, நவ.29-

பிரசித்தி பெற்ற திருவண்ணாமலை அண்ணாமலை யார் கோயில் கார்த்திகைதீபத்திருவிழா வரும் 4ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இந்த ஆண்டு தீபத்திரு விழாவில், 40 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், ஒவ்வொரு ஆண்டும் தீபத் திருவிழாவின்போது, செல்போன் மற்றும் இணையதள சிக்னல் கிடைக்காமல் தவிப்பது வழக்கமா உள்ளது. ஒரே நேரத்தில் பல லட்சம் பக்தர்கள் செல்போனை உபயோகிப்பதால் இந்த நெருக்கடி ஏற்படுகிறது.

எனவே, இந்த ஆண்டு நெட்வொர்க் சிக்னல் பிரச்னை ஏற்படாமல் தடுக்க தற்போதுள்ள செல்போன் டவர்களின் திறனை மேம்படுத்த வேண் டும் என ஒன்றிய தகவல் தொடர்பு துறை அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தி யாவிடம், திருவண்ணாமலை தொகுதி திமுக சி.என். அண்ணாதுரை எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக, ஒன்றிய அமைச்சரிடம், அண்ணாதுரை எம்.பி. அளித்துள்ள மனுவில் தெரிவித்திருப்பதாவது:

தென்னகத்தின் புகழ் பெற்ற ஆன்மிக தலம் திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயில். இங்கு நடைபெறும் கார்த்திகைதீபத்திருவிழாவில் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். தென்னகத்தில் மிக அதிகமான எண்ணிக்கையில் பக்தர்கள் பங்கேற்கும் மிகப்பெரிய விழா கார்த்திகை தீபத்திரு விழா வாகும். லட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலை நகரில் திரள்வதால், செல்போன் சிக்னல் கிடைக்காமல் பக்தர்கள் தவிக்கின்றனர். மேலும், இணையதள செயல்பாடும் பாதிக்கப்படுகிறது.

எனவே, இந்த ஆண்டு தீபத்திரு விழாவை முன்னிட்டு திருவண்ணாமலையில் உள்ள பிஎஸ்என் எல் மற்றும் தனியார் செல்போன் நிறுவனங்களின் செல்போன் டவர்களின் திறனை தற்காலிகமாக மேம்படுத்த வேண்டும்.

அதற்கான, தொழில்நுட்ப வல்லுநர் குழுவை அனுப்பி போர்க்கால அடிப்படையில் இந்த பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதிக திறன் மிக்க தற்காலிக செல்போன் டவர்களை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும். தீபத்திருவிழா தேரோட்டம் நடைபெறும் நாள் முதல் கார்த்திகை தீபத் திருவிழா முடிந்து பவுர்ணமி கிரிவலம் நிறைவடையும் வரை செல்போன் டவர்களின் திறன் மேம்படுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இவர் அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச. அன்பழகன்
**நவம்பர் 29 (2022)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

பேரூர் வார்டு செயலாளர், ஒன்றியச் செயலாளர், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்பு வகித்தவர்.

மேச்சேரி கூட்டுறவு வீட்டு வசதி சங்க தலைவராகவும், மேச்சேரி கூட்டுறவு பட்டு கூட்டுறவு சங்க துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள்

# இ-வர்த்தகத்தின் மூலம் ரூ.24.48 லட்சத்திற்கு விற்பனை!

சென்னை, நவ. 29-

மகளிர் பொருளாதார சுய சார்பு பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக ஆக்கப்பூர்வமான திட்டங்களை செயல்படுத்தினார். கிராமப்புறங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை நகர்ப்புறப் பகுதிகளில் விற்பனை செய்திடும் வகையில் மாவட்டத் தலைநகரங்களில் வளாகங்கள் அமைத்து, அவற்றுக்கு 'பூமாலை வணிக வளாகங்கள்' என்று பெயர் சூட்டி, அவ்வளாகங்களில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திடச் செய்து, சுய உதவிக் குழுக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் நல்லாட்சி புரிந்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வண்ணம், மண்டல அளவிலான சாராஸ் கண்காட்சிகள், வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான விற்பனைக் கண்காட்சிகள், கல்லூரிச் சந்தைகள் போன்றவை நடத்திட ஆணையிட்டு, அக்கண்காட்சிகளை துவக்கி வைத்தும், கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டும் சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்கமளித்து, அவர்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருகிறார்.

திராவிட மாடல் ஆட்சிக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், சிறப்பாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சாதனைகள் பல படைத்து வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பல்வேறு சமுதாய அமைப்புகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்திட பல்வேறு புதிய முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு மிகப் பெரிய அளவிலான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திடும் வகையில், மதி அனுபவ அங்காடி (MaThi Experience Store), சிறுதானிய உணவகங்கள் (Millet Café), மதி சந்தை விற்பனை இணையதளம், இயற்கை அங்காடி, மதி நடமாடும் விற்பனை வாகனம் (MaThi Express), வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்பு, அடுக்குமாடி விற்பனை சந்தை போன்ற முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக இணைய வழி விற்பனையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக, தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களை நான்கு மண்டலங்களாகப் பிரித்து, சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்ட தலைநகரங்களில் மண்டல அளவிலான இ-வர்த்தக சேவை முகாம் நடத்தப்பட்டது.

இம்முகாமில் Amazon, Flipkart, Meesho, India Mart, Gio Mart, Boom மற்றும் GeM போன்ற இ-வர்த்தக முன்னணி நிறுவனங்கள் பங்கேற்று மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை பதிவேற்றம் செய்ய உதவி புரிந்தனர். இம்முகாமின் மூலமாக சுமார் 2,671 பொருட்கள் வரவழைக்கப்பட்டு அதில் 2,296 பொருட்கள் பல்வேறு இவர்த்தக தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

இ-வர்த்தக தளங்களின் வாயிலாக இதுவரை ரூ.24.48 இலட்சம் மதிப்பிலான சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்விற்பனையை அதிகரிக்க மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கு இ-வர்த்தக நிறுவனங்கள் மூலம் தொடர்ந்து பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழியில், சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கைகளின் பலனாக, சுய உதவிக் குழுக்கள் இன்று பொருளாதார வளர்ச்சி பெற்று, வளமான வாழ்வாதாரத்தைப் பெற்று வருகின்றனர் என்றால் அது மிகையில்லை.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. புதூர் பகுதி கழக செயலாளர் என்.எம்.புண்ணியமூர்த்தி ஏற்பாட்டில் பறவை கூடு சிறார் இல்லம் L.P.N பள்ளியில் உள்ள விடுதியில் தங்கி படிக்கும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு தட்டு, துண்டு, பிஸ்கட் மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். உடன் கிழக்கு மண்டல தலைவர் எஸ்.வாசுகி, வடக்கு மண்டல தலைவர் சரவணபுவனேஸ்வரி, மாவட்ட துணை செயலாளர் ராகவன் மாமன்ற உறுப்பினர்கள் முத்துகுமாரி ஆழ்வார்,அந்தோணி ராயன்,மாநில நிர்வாகிகள் அக்ரி கணேசன், சம்மட்டிபுரம் ஆர்.கணேசன் வட்ட கழக நிர்வாகிகள் வி.சி.மாதவன், ஆர்.ஆர்.மகேந்திரன், பி.எம்.மருது, பகுதி கழக நிர்வாகிகள் மோகன்,விஜயசேகரன், பாலசுப்பிரமணி, செல்லத்துரை,ஜெயசீலி, பிரபாகரன், ஆனந்த், இளைஞர் அணி நிர்வாகிகள் தமிழ் சந்திரன்,கேசவன், IT wing பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.